# ஜீலை 8 - புனித உபால்ட்



இவர் 30 வயதாகுமுன்னரே ஆயர் ஆனார். சண்டை சச்சரவுகளை நீக்கி சமாதானத்தை ஏற்படுத்துவதில் இவர் மிகவும் திறமை பெற்றவர். ஒருமுறை இரு சாரார் கத்திகளுடனும் தடிகளுடனும் தெருவில் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். சண்டையை ஒழிக்க வேறு வழியில்லையெனக் கண்ட உபால்ட் இரு கட்சிகளுக்கும் மத்தியில் போய் நின்றார். ஒன்றில் அவர்கள் தங்கள் கத்திகளையும், தடிகளையும் கீழே போட வேண்டும் அல்லது உபால்டின் மண்டையைப் பிளக்க வேண்டும். இவ்விதம் சண்டை முடிந்தது.

பிரடெரிக் பார்பரோசா என்னும் பேரரசன் ஸ்பொலேத்தோ பட்டணத்தைக் கொள்ளையடித்து விட்டு குபியோ நகரையும் நாசமாக்கும் நோக்கத்துடன் வந்தான். இதையறிந்த உபால்ட் தனியே யாதொரு உதவியுமின்றிப் புறப்பட்டு, பட்டணத்துக்கு வெளியே பேரரசனைச் சந்தித்து அவன் தன் எண்ணத்தை மாற்றும்படிச் செய்தார். குபியோ பட்டணத்தைச் சுற்றியிருந்த மதில் சுவர்களை பழுது பார்த்துக் கொண்டிருந்த சிலர் ஆயரது திராட்சைத் தோட்டத்தின் சில சிறந்த திராட்சைக் கொடிகளை கவலையின்றி மிதித்து அழித்தார்கள். ஆயர் ஆட்சேபித்தார். வேலையாட்களின் தலைவனோ அவரைப் பிடித்து பலமாக தள்ளினான். அவர் சுண்ணாம்புத் தொட்டியில் விழுந்தார். தலை முதல் பாதம் வரை சுண்ணாம்பும் மண்ணும் வடிய, ஆயர் தொட்டியிலிருந்து வெளியேறி ஒரு வார்த்தையும் பேசாமல் வீட்டிற்குத் திரும்பினார். இதை அறிந்த பட்டணத்து மக்கள் குற்றவாளியைத் தண்டிக்கும்படி நீதிமன்றத்திற்கு அவனை இழுத்துச் சென்றார்கள். ஆயரும் நீதிமன்றத்திற்குச் சென்றார். குற்றவாளி பயந்து நடுங்கினான். ஆயரோ அவனை மன்னித்து விடுதலைத் தீர்ப்பு பெற்றுக் கொடுத்தார். தமக்கோ, தமது தோட்டத்திற்கோ எவ்வித நஷ்ட ஈடும் அவர் கேட்கவில்லை. அவனைக் கடிந்து கொள்ளவுமில்லை. கோபித்து ஒரு வார்த்தை முதலாய் சொல்லவில்லை.

**சிந்தனை:** "நீ பீடத்தண்டையில் உனது காணிக்கையை செலுத்தும் பொழுது உன் சகோதரன் உன் மேல் ஏதோ மனத்தாங்கலாய் இருக்கிறான்(ள்) என்று அங்கே நினைவு கூர்வாயாகில் உன் காணிக்கையை அங்கே பீடத்தின் முன்பாக வைத்து விட்டு முதலில் உன் சகோதரனோடு உறவாடப்போ, பின்னர் வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக".

**செபம்:** ஆண்டவரே, எங்கள் விரோதிகளை மன்னித்து அவர்களுக்காக மன்றாடும் வரத்தை எங்களுக்குத் தாரும்.